169



78368.

சி. கந்தசாமி அவர்கள்

ப்புரை பெற்ற

# சீனச் செஞ்சேனை

# சீனச் செஞ்சேனை

★

எழுதியது :
இளஞன்

★

தமிழகப் பதிப்பகம்
ராஜபாளையம்

முதற்பதிப்பு

1952, மே

# பதிப்புரை

**சீனச் செஞ்சேனை** எமது நான்காவது வெளியீடு. புதிய சீனவைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற ஆர்வத்துடிப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த ஆவலை இச்சிறு வெளியீடு ஓரளவு பூர்த்திசெய்யுமென்று நம்புகிறோம்.

இம்முயற்சியில் நாங்கள் தொடர்ந்து ஈடுபட வேண்டுமென்ற கருத்துடன் உணர்ச்சி மிகுந்த மதிப்புரை கொடுத்து எங்களை ஊக்குவித்து உற்சாகமூட்டிய உழவர் தலைவர் தோழர் **மணலி கந்தசாமி** அவர்களுக்கு உள்ளக்கனிவுடன் நன்றி கூறி எங்கள் வந்தனத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆரம்ப முதல் இன்றுவரை பதிப்பக வளர்ச்சிக்கு உதவிவரும் நண்பர்கள் அனைவருக்கும் நன்றி.

வணக்கம்,

**தமிழகப் பதிப்பகத்தார்.**

ராஜபாளையம் 20—5—52

**விலை அணா 0-5-0**

ஹஹு[illegible] அச்சகம்,
திருச்சிராப்பள்ளி

### தமிழக உழவர் தலைவர்

## தோழர் மணலி சி. கந்தசாமி அவர்கள், M.L.A.,

# மதிப்புரை

நண்பர் இளைஞன் எழுதிய "சீனச் செஞ்சேனை" வரலாற்றை வெகு ஆவலுடன் படித்தேன்.

நலிந்து மெலிந்து நசித்துக்கொண்டிருந்த சீனம் ஏகாதிபத்தியப் பிடிப்பினின்றும்விடுபெற்ற இரண்டே வருடத்திற்குள் சுதந்திரக் கோட்டையான சோவியத் ருஷியாவிற்கு அடுத்த வரிசையில் நிற்கும் ஜனநாயக வல்லரசாகத் திகழ்கிறது. அடிமை நாட்டு மக்களுக்கு விடுதலை வழிகாட்டியாக விளங்குகிறது. நிலப் பிரபுத்துவத்தை ஒழித்து உழவனுக்கு நிலம் வழங்கி உலகம் கண்டும் கேட்டுமிராத பிரமாண்டமான நிலச் சீர்திருத்தத்தை அமுலுக்குக் கொண்டுவந்ததின் மூலம் நாற்பது கோடி மக்களின் உற்பத்தி சக்தியைக் கட்டவிழ்த்துவிட்டு, பொருளாதாரத் துறையில் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறுகிறது.

இத்தகைய மகத்தான சாதனைகளுக்கு காரணமாயிருந்த மிகப் பிரதான ஆயுதங்களுள் ஒன்று செஞ்சேனை. இதன் பிறப்பு வளர்ப்பையும், ஒப்புயர்வற்ற குண விசேசங்களையும், அந்த வீரமக்கள் சேனையின்

ஆதர்ச கர்த்தர்களைப்பற்றியும் வெகு அழ காக ஆசிரியர் துள்ளும் நடையில் துடிப் புடன் எடுத்துக்காட்டியிருக்கிறார்.

ஏகாதிபத்திய நிலப்பிரபுத்வ சக்திகளை சர்வபரித்தியாகம் செய்து நிர்மூலம் செய்த சேனை, சீனச் செஞ்சேனை. உலக சமாதா னத்தைப் பாதுகாக்கக் கங்கணம் கட்டி நிற்கும் சேனை வீரமிக்க சீனச் செஞ்சேனை. சமாதான காலத்தில் உற்பத்திப் பெருக் குக்கு உழவனுடன் உழுது பயிரிடும் ஆக்க வேலைச் சேனை, சீனச் செஞ்சேனை. சகல அடிமை நாட்டு மக்களுக்கும் பூரண விடுதலை வழிகாட்டியாய் ஆதர்சமளிக்கும் சேனையாய் திகழ்வது சீனச் செஞ்சேனை. இத்தகைய சீனச் செஞ்சேனையைப்பற்றி பூரணமாக அறிந்துகொள்வது ஏகாதிபத்திய நிலப்பிர புத்துவப் பிடிப்பில் சிக்கி பஞ்சத்தின் தலைவாயலில் பரதவிக்கும் தமிழன் ஒவ் வொருவருடைய கடமை.

நண்பர் எழுதியிருக்கும் சீனச் செஞ் சேனை என்ற சிறு வெளியீடு ஒவ்வொரு தமிழன் கையிலும் இருக்கவேண்டுமென் பது என் பேரவா. நண்பர் இளைஞன் தமிழ் நாட்டு மக்களைத் தட்டி எழுப்பும் இந்த எழுத்துப் பணியில் மேலும் மேலும் பூரண மாக ஈடுபட வேண்டுமென்பது என் விருப்பம்.

28—4—1952. மணலி சி. கந்தசாமி.

# முகவுரை

"சமாதான ரீதியில் எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுவதற்கு சந்தர்ப்பமளிக்க நமது எதிரிகள் விரும்பவில்லை. ஆகையினால் சீனப்புரட்சியின் முறைகளும் மார்க்கங்களும் ஆயுதப் போராட்டமாகவே இருக்கவேண்டும். இருக்கவும் முடியும். ஆயுதந்தாங்கிய போராட்டத்தை அலட்சிய பாவத்துடன் நோக்குவது தவறான முடிவேயாகும்".

மா—சே—துங் 1927-ல் சீன மக்களுக்கு விடுத்த அறைகூவல். இந்த எச்சரிக்கையை எதிர் காலம் உண்மையாக்கியது. உறுதிபடுத்தியது. ஆயுதப் புரட்சிக்கு ஆக்கமளிக்காவிடில் பாட்டாளி மக்களுக்கு இடமில்லை. அப்பொழுது புரட்சியில் வெற்றியும் கிட்டாது; என்று அறுதியிட்டுக் கூறினார். அன்று அவர் வரையறுத்த திசை வழி தவிர்க்கப்பட்டிருந்தால் இன்றைய சீனாவை நாம் நிச்சயமாகப் பார்த்திருக்க முடியாது. மா—சே—துங் விடுத்த எச்சரிக்கையின் எதிரொலி தான் செஞ்சேனையாக உருவாகியது. **வாழ்க ! மா-சே-துங்.**

1925-ல் ஆரம்பிக்கப்பட்ட புரட்சி 1927-ல் ஒரு நெருக்கடியான கட்டத்தை எட்டியது. கோ—மிங்—டாங் கட்சியின் தடுமாற்றம் நாட்டை நாசப்பாதையில் இழுத்துச் செல்ல முயன்றது.

சியாங்–கே–சேக் ஒரு சர்வாதிகாரியாகச் சதி செய்தான். மக்கள் எழுச்சியை மடக்கிவிட சியாங்–கே–சேக் கையாண்ட பயங்கர முறைகளை நினைத்தாலே நெஞ்சு குமுறும். கற்பனைக்கும் எட்டாத கொடுமைகள். மரண தாண்டவமாடினான். பொதுவுடமைக் கட்சியில் அங்கம் வகிப்பதும் மரணதண்டனைக்குரிய குற்றமென்று பிரகடனப்படுத்தினான். சீன வரலாற்றில் 1927-ம் வருடம் ரத்தக்கறை நிறைந்தது; மாசு படிந்தது.

சோதனை மிகுந்த இந்த நெருக்கடியில் புதிய பிரச்னை ஒன்றையும் பொதுவுடமைக் கட்சி சமாளிக்கவேண்டியதாயிற்று. கட்சியில் கருத்து வேற்றுமை தோன்றியது. வலதுசாரித் தலைவர்கள் கொப்பளித்துக் கிளம்பிய மக்கள் எழுச்சியைக் கண்டு மிரள ஆரம்பித்தார்கள். ஆயுதப் புரட்சியை ஆதரிக்க மறுத்தார்கள். சந்தர்ப்பவாதத் தலைவர்கள் ஜனசக்தியை சிதரடிக்க நினைத்தார்கள். ஆனால் மற்றொரு பிரிவினர் குமுறிக்கொண்டிருந்த மக்கள் எழுச்சியை ஒரு மாபெரும் புரட்சியாக பரிமாணிக்கச் செய்ய வேண்டுமென்று துடித்தார்கள். இந்த அபாயகரமான நெருக்கடியில்தான், ஆயுதப் புரட்சி தவிர்க்கப்பட்டால் என்றுமே சீனம் தலைநிமிர முடியாது என்று மா–சே–துங் திட்டவட்டமாகத் தெரிவித்தார். இந்த தீர்க்கதரிசனத்தின் பெருமையை உலகம் இன்று நிதர்சனமாக காண்கிறது.

வேதனைமிகுந்த பாடங்களை புரட்சி (1925—27) கற்பித்த போதிலும் அவைகளையெல்லாம் எதிர் கால நடவடிக்கைகளுக்கு ஏற்ற அனுபவமாகக் கொண்டனர். புரட்சியின் முடிவு மக்கள் ராணுவம் தேவை என்ற நிர்ப்பந்தத்தை உண் டாக்கியது. இப்பொழுதான் மக்கள் ராணுவத் தின் அவசியத்தை பரிபூரணமாக உணர ஆரம்பித் தார்கள். சீனாவைப் போன்ற ஒரு நாட்டில் மக்கள் ராணுவமில்லாமலும் ஆயுதப் போராட்ட மின்றியும், பாமரமக்களுக்கு எந்த ஒரு உருவான உயர்வையும் உண்டாக்க முடியாதென்ற தெளி வான முடிவுக்கு வந்தனர் பொதுவுடைமை வாதிகள்.

பொதுவுடைமைக் கட்சி புதிய கட்டுக்கோப் புடன் புத்துயிர் பெற்றது. புரட்சிக் கொடியை எப்படியும் உயர்த்தியே தீருவோம் என்ற முழக்கம் நாடெங்கும் எதிரொலிக்க ஆரம் பித்தது. இந்தப் போர் முழக்கம் ஒரு புதிய உணர்ச்சியை மின்சார வேகத்தில் பரப்பியது. புத்துணர்ச்சியின் பிரதிபலிப்பு **நான்சாங்** நகரத் தில் 1927 ஆகஸ்ட் முதல் நாளன்று ராணுவப் புரட்சியாக வெடித்தது.

★

# சீனச் செஞ்சேனை

★

## தோற்றமும் வளர்ச்சியும்

நான்சாங் ராணுவம் என்று புரட்சிக் கொடி உயர்த்திய தோ அன்றே சீனத்தின் வரலாற்றில் அழிக்க முடியாத அத்தியாயம் ஆரம்பமாகி விட்டது. புரட்சிக்காரர்களுக்கு யெட்டிங் (Yeh-Ting) ஹோலுங் (Ho-Lung) தலைமை தாங்கினார்கள். சூட்டே ஆலோசகராக விளங்கினார். புரட்சி வீரர்கள் பொதுவுடமைக் கட்சியின் தலைமையில் அணிவகுத்தனர். இவர்களே செஞ்சேனையின் மூலவர்கள்; முதல்வர்கள்.

நான்சாங்கில் குமுறிய எழுச்சி அங்கு நீடித்து நிலைக்க முடியவில்லை. ஆகஸ்ட் மாதம் 5ந் தேதி வெளியேற வேண்டிய நிர்ப்பந்த மேற்பட்டது. புரட்சிப் படையினர் குவான்டுங் மாகாணத்திற்குச் சென்றனர். இவர்களின் அனுபவக் குறைவும் எதிரிகளின் அளவுக்குமீறிய பலமும் புரட்சிப்படையினரை பெருந் தொல்லைகளுக்கு ஆளாக்கியது. பலபிரிவுகளாக பிரிந்து பரந்தளவில் வியாபிக்க முனைந்தனர். ஒரு பகுதி ஹாய்புங், லுக்புங் பிரதேசத்திற்குச் சென்றது. மற்றொரு பிரிவு சூட்டேயின் தலைமையில் ஹ்யூனன் பிரதேசத்தை அடைந்தது. ஆங்காங்குள்ள விவசாயி தொழிலாளி மக்களின் சக்தியை ஒன்று திரட்ட முற்பட்டது.

பொதுவுடைமைக் கட்சியின் தலைமையில் மக்கள் ஆயுதமேந்தி போராட ஆரம்பித்து விட்டார்கள் என்பதை

நான்காம் எழுச்சி பிரகடனப்படுத்தியது. இந்த ராணுவப் புரட்சி சீனமெங்கும் உணர்ச்சியுடன் பிரதிபலிக்க ஆரம் பித்தது. புரட்சி புதுவேகத்தைப் பெற்றது.

ஆகஸ்ட் இரண்டாவது வாரத்தில் தெற்கு ஹோப்பா விலுள்ள விவசாயிகள் புரட்சிக் கொடி உயர்த்தினர். அடுத்தமாதத்தில் ஹ்யூனன் விவசாயிகள் ஆயுதப் போராட் டத்தை ஆரம்பித்தார்கள். கிழக்குப்பகுதியில் பல இடங்கள் விவசாயிகளால் கைப்பற்றப்பட்டன. அக்டோபரில் க்வான் டுங் மாகாணத்தில் விவசாயிகளின் ஆயுதப்போராட்டம் ஆரம்பமாகியது. நான்காம் எழுச்சியைத் தொடர்ந்து, நாடு முழுவதும் புரட்சித் தீ பரவத் தொடங்கியது. இந்த எழுச்சியைத்தான் அறுவடைக்காலப் போராட்டம் என்று கூறுவது. இந்தப் போராட்டங்களில் ராணுவப் புரட்சிக் காரர்களும் பொதுவுடமைவாதிகளும் பூரணமாக கலந்து கொண்டனர். விவசாயிகளும் தொழிலாளர்களும் உற்சாகத் துடன் பங்கு கொண்டனர்.

விழிப்புற்ற ஜனசக்தியின் எழுச்சியை பொதுவுடமை யாளர்கள் தங்களுக்கே உரித்தான அரசியல் கண்ணோட் டத்துடன் நோக்கினார்கள். ராணுவப் புரட்சிக்காரர்களையும் பிற புரட்சியாளர்களையும் ஒரே அணியில் கொண்டுவர முற் பட்டனர். சீனவரலாற்றிலேயே இதுவரை கண்டறியாத இந்தக் கூட்டு முயற்சியின் முதிர்ச்சி தான் செஞ்சேனையை கட்டுக் கோப்பு பெறச் செய்தது. செஞ்சேனை தோன்றிய நாளிலிருந்து அதன் வளர்ச்சிக்காக பொதுவுடமைவாதிகள் அரும்பாடு பட்டனர். அரசியல் ரீதியிலும், லட்சிய ரீதியி

லும், ஸ்தாபன ரீதியிலும், செஞ்சேனையைச் சிறப்புறச் செய்ய பொதுவுடமைவாதிகள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் அற்ப சொற்பமல்ல. வீரச்செயல் வாதம்போன்ற சில குறைபாடுகளைக் களைந்து உயரிய ராணுவ ரீதியில் சகல புரட்சிகாரர்களையும் ஒரே அணியில் கொண்டுவந்து, செஞ்சேனையின் தலைமைப் பொறுப்பையும் மேற்கொண்டார்கள்.

சூட்டேயின் தலைமையில் ஹ்யூனனில் போராடி வந்த ராணுவம் 1928 மே மாதம் **சியாங்காங்** மலைப் பிரதேசத்திலிருந்த புரட்சிக்காரர்களுடன் சேர்ந்துகொண்டது. இந்த ஐக்கியம் செஞ்சேனையின் "முன்னேற்றத்தின் முதல் மைல் கல்லாகும். வளர்ச்சிக்கு சரியான முறையில் அடிகோலியது. புரட்சி புத்துயிர் பெற்றது. ராணுவப் புரட்சிக்காரர்களையும் பிற புரட்சியாளர்களையும் ஒரே அணியில் கொண்டுவந்தது **மா-சே-துங்**கின் மேதை மிகுந்த தலைமை தான். தமது ஒப்பற்ற திட்டங்களின் மூலம் செஞ்சேனையின் அடிப்படையை அற்புதமாக அமைத்தார். தமது மகத்தான சாதனைகளின் மூலம் மக்களின் ஒத்துழைப்பையும் நம்பிக்கையையும் பரிபூரணமாகப் பெற்றார்.

பாட்டாளி மக்களின் தலைமையில் செஞ்சேனையின் வளர்ச்சிக்கான வழிமுறைகள் வகுக்கப்பட்டன. புதியமுறைகளும் நோக்கங்களும் புகுத்தப்பட்டன. ஒன்பது அம்சங்கள் கொண்ட திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது.

(1) கட்சியின் ஸ்தாபன அமைப்பு
(2) கட்சியின் கல்வி
(3) செஞ்சேனையின் பிரசாரம்

(4) ராணுவ வீரர்களின் அரசியல் பயிற்சி

(5) வாலிப வீரர்களுக்கான விசேசக் கல்வி

(6) ராணுவத்தில் கார்பால் தண்டனையை ரத்து செய்தல்

(7) காயமடைந்த வீரர்களுக்கு சலுகை காட்டல்

(8) அரசியல் முறைக்கும் ராணுவ முறைக்கும் செஞ்சேனையிலுள்ள சம்மந்தம்

(9) பூர்ஷவா மனப்பான்மையை திருத்துவதுடன் செஞ்சேனையின் கட்சி வட்டாரத்திலிருந்து வரும் தவமுன போக்கை திருத்துவது.

மா–சே–துங்கின் புகழ்பெற்ற இந்தத் திட்டங்கள் 1929ல் "**குட்டீனில்**" நடைபெற்ற மகாநாட்டில் ஒப்புக் கொள்ளப்பட்டது.

இதற்குப்பிறகு செஞ்சேனை வெகு உத்வேகத்துடன் வளர்ந்து பெருகி வலுவடைய ஆரம்பித்தது. எந்தப் பொதுவுடமைவாதிகளை பூண்டோடு ஒழித்துக்கட்ட சியாங்–கே–சேக் கங்கணங் கட்டினரோ அதே பொதுவுடமைவாதிகள் இன்று ஒரு பலம்பொருந்திய ராணுவத்துடன் விளங்க ஆரம்பித்தார்கள். செஞ்சேனையின் பலம் 1930ல் எழுபதாயிரத்திற்கும் அதிகமாகியது. "**கியாங்க்ஸி**" மாகாணத்தில் 1931ல் சீனச் சோவியத் குடியரசு தோன்றியது. பொதுவுடமைவாதிகள் ஆட்சி மலர்ந்து. இவர்களது நிர்வாக ஆதிக்கத்தில் பதினைந்து ஜில்லாக்கள் உட்பட்டன. "**ஜுயிசின்**", பொதுவுடமை அரசாங்கத்தின் தலைநகராக விளங்கியது. எடுத்த எடுப்பிலேயே செஞ்சேனை வெற்றி முரசு கொட்டியது.

★

## பங்குகொண்ட போராட்டங்கள்.

செஞ்சேனை தோன்றிய நாளிலிருந்தே அது பகைவர்களின் பயங்கரத்தாக்குதல்களைத் தொடர்ந்து எதிர்நோக்க வேண்டியதாயிற்று. பொதுவுடமையாளர்களின் பிடிப்பிலிருந்த பிரதேசங்களை மீட்பதற்காக சியாங்-கே-சேக் தமது முழு சக்தியையும் பயன்படுத்தப் பின்வாங்கவில்லை. சீன சோவியத் குடியரசைக் கருவிலேயே சிதைத்துவிடத் துடித்தான். பல லட்சம் துருப்புகளை ஈடுபடுத்தினான். ஆறுமுறை படையெடுத்தான். தாமே நேரடியாகத் தலைமை தாங்கினான். ஏகாதிபத்தியங்களின் உதவி ஏராளமாகக் கிடைத்தது. ஆகாய விமானங்கள், யந்திர பீரங்கிகள், டாங்கிகள் போன்ற சகலவிதமான நவீன தளவாடங்களும், சாதனங்களும் பிரயோகப்படுத்தப்பட்டன. எல்லாம் பயனற்றுப்போயிற்று, பொதுவுடமையாளர்களின் பாசறையை நெருங்கக்கூட முடியவில்லை. செம்படையினரின் முன் சியாங்-கே-சேக் ஜம்பம் சாயவில்லை. கொரில்லா போர் தந்திரங்களுக்கு முன் கோமிங்-டாங்-கூட்டம் தலைவணங்கவேண்டியதாயிற்று. மா - சே - துங்கின் போர் தந்திரங்களும் திட்டங்களும் சியாங்-கே-சேக்கை செயலற்றுப்போகச் செய்தது.

படை பலத்தினால் பொதுவுடமையாளர்களை வெற்றி காண முடியவில்லை பட்டினி போட்டு பழிவாங்க குறுக்கு வழிகண்டுபிடித்தான் சியாங்-கே-சேக். கியாங்க்ஸி மாகாணத்தையே சுற்றி வளைத்து முற்றுகையிட்டான். இதனால்

பொதுவுடமையாளர்களுக்கு வெளியிலிருந்து எந்தவித மான உதவியும் கிடைக்க முடியாமல் போகுமென்று நினைத் தான். பயங்கரமான முற்றுகை, பத்து லட்சம் துருப்பு கள் பங்கு கொண்டன. ஏகாதிபத்தியங்களின் முழு உதவி வேறு. எதிரியின் படைத் தன்மையை நிதானிக்காமல் இம்முறை செம்படை நேருக்கு நேர் எதிர்த்து நின்று போராடத்துணிந்தது. தாக்குதலை எதிர்த்து தாக்குப் பிடிக்கத் திணறியது. செஞ்சேனையின் கட்டுக்கோப்பு கலகலக்க ஆரம்பித்தது. சரணகதியடையவேண்டும் அல் லது தப்பிவிடவேண்டுமென்ற நிர்ப்பந்தமேற்பட்டது. முற்றுகையை ஊடுருவி 1934-ம் வருடம் நவம்பர் மாதம் செஞ்சேனை ஆச்சரியமாகத் தப்பிவிட்டது. சியாங் - கே - சேக் ஏமாந்தான். பகீரதப் பிரயத்தனமும் பயன்பட வில்லை.

கியாங்க்ஸி மாகாணத்திலிருந்து வெளியேறிய செம் படையினர் எதிரிகளின் கெடுபிடிப் பிரதேசங்களின் வழி யாகவே புகழ்பெற்ற **நெடுந்தூரப் பிரயாணத்தைத்** தொடங்கினார்கள். கால் நடையாகவே ஒரு வருடகாலம் 8000 மைல்கள் கடந்து **ஷென்சி** மாகாணத்திலுள்ள **யேனு னில்** தங்கள் புதிய தளத்தை அமைத்தார்கள். ஒரு வரு டத்திற்குப் பின் பொதுவுடமையாளர்களின் ஆட்சி மறுபடி யும் ஆரம்பமாகியது.

நெடுந்தூரப் பிரயாண நிகழ்ச்சி அற்புதமானது. அசா தாரணமான சாதனை. இந்த வரலாற்றை ஒரு சரித்திர மாகவே எழுதலாம். நெடுந்தூரப் பிரயாணமென்றால்

ஏதோ மனமுடைந்த மனிதக் கூட்டம் கால் நடையாகச் சென்றதாக கருதிவிடக்கூடாது. அரசாங்கமே நடந்து சென்றது. தியாகிகள் அடங்கிய ஜன சமுதாயமே திரண்டு சென்றது. விரட்டிவந்த சியாங்-கே-சேக் படையுடன் ஒருபக்கம் போராட்டம், மற்ருெரு பக்கம் மக்களிடையே பிரசாரம். இது அபாரமான பலனைக்கொடுத்தது. அற்புதமாக மக்கள் ஆதரவைப் பெற்றனர். இவர்களது பரிபூரணமான ஒத்துழைப்புத்தான் கோமிங்-டாங் கூட்டத்தினரை செயலற்றுப்போகச் செய்தது.

பொதுவுடமைக் கட்சி 1935-ல் ஒரு புதிய நோக்கும் போக்கும் பெற்றது. கட்சியின் தலைமைப் பொறுப்பை மா-சே-துங் ஏற்ருர். இந்த மாற்றம் சரித்திரப் பிரசித்தி பெற்றது. நெடுந்தூரப் பிரயாணத்தின் எதிரொலியால் எழுந்த தோல்வி மனப்பான்மையைத் துடைத்து, புரட்சியை சிதைத்துவிடாமல், புத்துணர்ச்சி பெறச்செய்தது புதிய தலைமை. அரசியலை மட்டும் **மார்க்சிச-லெனினச** கண்ணேட்டத்துடன் பார்க்கவில்லை ராணுவத்தையும் அதே கண்ணேட்டத்துடன் நோக்கியது மா-சே-துங்கின் தலைமை. அரசியல் பிரச்சனைகளை மட்டுமல்ல, ராணுவப் பிரச்சனைகளையும் மார்க்கிசத்தின் மூலமாகவும் லெனினசத்தின் மூலமாகவும் தீர்க்க முடியுமென்பதை பொதுவுடமைக் கட்சி சாத்தியமாக்கியது.

பொதுவுடமை அரசாங்கம் தனது புதிய தளத்தை பலப்படுத்துவதற்கு முன் ஜப்பானிய ஆக்கிரமிப்பு நெருக்கடியான நிலைமையை ஏற்படுத்தியது. மூச்சு வாங்குவ

தற்குகூட நேரமில்லாமல் செஞ்சேனை ஜப்பானிய அபாயத்தை எதிர்க்கவேண்டியதாயிற்று. இந்த அபாயகரமான கட்டத்திலும் **சியாங்-கே-சேக்** பொதுவுடமையாளர்களை வேட்டையாடுவதில் சிரத்தை காட்டினரே ஒழிய பொது எதிரி ஜப்பானியரை எதிர்க்க முன் வரவில்லை. விரும்பவுமில்லை. ஜப்பானியர்கள் அபாயகரமானவர்களாத் தோன்றவில்லை. ஆனால் பொதுவுடமைவாதிகள் பயங்கர விரோதிகளாகத் தோன்றினர்கள். ஆனால் பொதுமக்கள் இந்த தற்கொலை நடவடிக்கையை அனுமதிக்கவில்லை. மக்களின் உணர்ச்சிக்கு சியாங்-கே-சேக் தலை வணங்கவேண்டிய நிர்ப்பந்தமேற்பட்டது. பொது எதிரியை எதிர்க்கப் பொதுவுடமையாளர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவேண்டியதாயிற்று. ஜப்பானிடமிருந்து சீனத்தைக் காப்பதற்காக தங்களது பரம வைரியாக விளங்கி வந்த சியாங்-கே-சேக்குடன் பொதுவுடமை வாதிகள் மனப்பூர்வமாக ஒத்துழைக்க முன் வந்தார்கள். இந்த நடவடிக்கை உலகத்தையே அதிர்ச்சியடையச் செய்தது. ஜப்பானிய ஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்தி சீனத்தின் சுதந்திரத்தைக் காப்பாற்ற செஞ்சேனை எழுந்தது.

செஞ்சேனை 1937-ல் எட்டாவது ராணுவமாகவும், புதிய நாலாவது ராணுவமாகவும் திருத்தி அமைக்கப்பட்டது. **சூட்டே** பிரதம தளபதியாக விளங்கினர். உள்நாட்டுப் போர்களில் பெற்ற அனுபவங்களைக் கொண்டு தங்களுக்கே உரித்தான முறையில் எடுத்த எடுப்பிலேயே எதிரியை திக்குமுக்காடச் செய்தனர். மக்களை ஒன்று திரட்டுவது, அவர்களை ஆயுதபாணிகளாக்குவது, அரசியல்

அறிவு ஊட்டுவது, போர் வீரர்களாக்கி செஞ்சேனைக்கு பக்கபலமாக்குவது. இந்த முறைகளைக் கையாண்டு போராட்டத்தை மக்கள் யுத்தமாக மாற்றுவதில் பிரமாதமான வெற்றி கண்டார்கள். "எல்லோரையும் கொல்", "அனைத்தையும் அக்கினியாக்கு", "கண்டதை கொள்ளையடி" என்ற கொள்கையுடன் கொள்ளைக்காரர்களைப்போல் விளங்கிய ஜப்பானியர்களின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை யெல்லாம் செஞ்சேனை தடுத்து நிறுத்தி முன்னேறியது. கொரில்லா போர் முறைகள் ஜப்பானியர்களுக்குத் தீராத மண்டையிடியாக இருந்ததோடு மட்டுமல்ல அவர்களது திட்டங்களை யெல்லாம் தட்டி நொறுக்கியது. கோ-மிங்-டாங் ராணுவம் ஜப்பானியர்களை எதிர்த்து ஒப்புக்காக போராடி கண் துடைத்ததோடு நிற்கவில்லை. செஞ்சேனைக்கு தீராத தொல்லைகளை வேறு கொடுத்துவந்தது. இந்த நிலையில் ஜப்பானியரை எதிர்க்கும் முழுப் பொறுப்பையும் செஞ்சேனை ஏற்றுக்கொண்டது என்று கூறுவது மிகையாகாது. போதிய சாதனங்கள் இன்றி, இடையறா இடுக்கண்களுக்கிடையே, தேவையுள்ள சௌகரியங்கள் இல்லாமல் எட்டு ஆண்டுகள் ஜப்பானிய யுத்த வெறியர்களை எதிர்த்துப் போராடியது செஞ்சேனை. கடைசியாக 1945-ல் ஜப்பான் சரணாகதியடைந்தது. இப்பொழுது செஞ்சேனையின் பலம் பத்து லட்சம்.

ஜப்பானிய எதிர்ப்புப் போராட்ட காலத்தில்தான் செஞ்சேனையின் பெருமையை வெளி உலகம் நன்கு உணரமுடிந்தது. பொதுவுடமைவாதிகளின் சலியாத உழைப்பையும் மக்கள் அவர்களிடம் கொண்டுள்ள அசைக்கமுடியாத நம்பிக்கை

யும் கண்டு உலகமே பிரமித்து நின்றது. செஞ்சேனை வீரர்களின் ஒப்பற்ற தீரத்தையும், ஈடற்ற தியாகத்தையும் கண்டு வெளி நாட்டவர்கள் அதிர்ச்சியுற்றனர். வீரர்களின் சில மிகுந்த சிறப்புகளையும், அவர்கள் புரிந்த தொண்டுகளையும் கண்ட அறிஞர்கள் நெஞ்சை அள்ளும் முறையில் பல புத்தகங்கள் எழுதியிருக்கிறார்கள்.

ஜப்பான் சரணுகதிக்குப்பின் அமெரிக்க ஏகாதிபத்தியம் சீன உள்நாட்டு விவகாரங்களில் தலையிட விரும்பவில்லையென்றும், நாட்டில் ஜனநாயகமும் சமாதானமும் ஏற்படுவதைத் தாம் வரவேற்பதாகவும் வாயளவில் கூறியது. ஆனால் உண்மையில் சீனவில் தனது அந்தரங்க அபிலாசையை நிறைவேற்றிக்கொள்ள முயற்சித்தது. ஜப்பான் எதிர்ப்பு யுத்த காலத்தில் எங்கோ ஒரு மூலையில் பதுங்கிக் கிடந்த சியாங்–கோ–சேக்கிற்கு ராணுவ உபகரணங்களையும் யுத்த தளவாடங்களையும் பெருத்தளவில் கொடுத்துதவ முன் வந்தது மக்கள் பெற்ற வெற்றியின் பலனை தட்டிப்பறித்து சீனவை அமெரிக்காவின் காலனியாக மாற்றிவிட மறைமுகமாக முனைந்தது. இத் திருப்பணிக்கு சியாங்–கே–சேக்கை ஒரு கருவியாக உபயோகித்தார்கள்.

அமெரிக்காவின் ஆதரவை பூரணமாகப் பெற்ற சியாங்—கே—சேக் தனது சர்வாதிகாரக் கொடுமைகளை மறுபடியும் கட்டவிழ்த்துவிட ஆரம்பித்தான். செஞ்சேனையையும் பொதுவுடைமைக் கட்சியையும் பொசுக்கிப் புதைத்தால் ஒழிய தமது எண்ணம் ஈடேற முடியாது என்பதை நன்கு தெரிந்திருந்த சியாங்—கே—சேக் அதற்குறிய தருணத்தை எதிர்

நோக்கிக்கொண்டிருந்தான். பொதுவுடமைக் கட்சியினர் சமாதானத்தை வற்புறுத்தி வந்ததால் அவர்கள் பலஹீன முற்றியிருப்பதாக ஒரு தவறான முடிவுக்கு வந்தான்.

சமாதானம்—ஜனநாயகம்—ஒற்றுமை — ஓங்கவேண்டுமென்று பொதுவுடமைக் கட்சியினர் வற்புறுத்தினர். மக்களும் சமாதானத்தையே விரும்பினார்கள், ஆனால் சமாதானத்தை சியாங்—கே—சேக் விரும்பவில்லையென்றால் அந்த நெருக்கடியையும் எதிர்நோக்கி முன்னேறத் தயாராக இருக்கவேண்டுமென்று விரிந்தளவில் மக்களை ஒன்றுதிரட்ட முற்பட்டனர். மக்களின் ஏகோபித்த விருப்பமான சமாதானத்தை வற்புறுத்தி மா—சே—துங் தாமே சியாங்—கே—சேக்கிடம் நேரில் தூது சென்றார். இந்த முயற்சிகளெல்லாம் வெற்றிபெறவில்லை. 1946 ஜுலை ஆரம்பத்தில் சியாங்—கே—சேக் மறுபடியும் உள்நாட்டுப் போரைத் தொடங்கினான். சீன மக்களின் விருப்பத்திற்கு மாறாகவும் உலக ஜனநாயக எண்ணத்திற்கு எதிராகவும் செஞ்சேனை மீது தாக்குதலைத் தொடுத்தான்.

அமெரிக்க ஏகாதிபத்திய டாலர் கிருபை பரிபாலித்தது. ஆகாயவிமானங்கள், டாங்கிகள், சகல நவீன சாதனங்களும் அளவுக்கு அதிகமாகக் கிடந்தன. இந்தப் போராட்டத்தில் 4,300,000 துருப்புகளை உபயோகித்தான். இதில் மூன்றில் ஒரு பாகத்திற்கும் குறைவாகவே செஞ்சேனையின் பலமிருந்தது. யுத்த தளவாடங்களும், ராணுவ உபகரணங்களும் நவீன சாதனங்களும் மிகமிக மோசமான நிலைமையிலிருந்தது. இருபக்கத்து ராணுவ நிலவரங்களை ஒப்பிட்டுப்

பார்க்கும்பொழுது ஒவ்வொரு துறையிலும் செஞ்சேனையின் பலம் குறைவாகவே காணப்பட்டது. ஆனால் அரசியல் தரத்தில் செஞ்சேனை சிறப்புற்றிருந்தது.

**"ராணுவ வலத்தில் எதிரிகள் சிறப்புற்றிருந் தாலும் அது தற்காலிகமானதே. ஏகாதிபத்தியங் களின் உதவியும் தற்காலிகமாகத்தான் இருக்க முடியும். ஆனால் மக்களின் ஆதரவு யாருக்கு கிடைக் கிறதோ அவர்களது பலமே தொடர்ந்து நிலைத்து நிரந்தரமாக இருக்கமுடியும். இந்தக் கண்ணோட்டத் துடன் பார்க்கும்பொழுது செஞ்சேனையின் பலமே சிறப்புடையது. ஆகவே செஞ்சேனை மக்களின் ஆதரவை மேலும் மேலும் பெற்றுகவேண்டும். வெற்றி காணுவதற்கு இதுவே அடிப்படை"**

மா—சே—துங் கூறிய தீர்க்கதரிசனம் நாளடைவில் நிதர்சனமாயிற்று. மக்களின் ஆதரவை ஒன்று திரட்டு வதின் மூலம் எதிர்ப்பு சக்தியை விரிந்தளவில் வளர்த்து வந்தார்கள். செஞ்சேனையின் பலமும் பெருக ஆரம்பித்தது. முதல் வருடத்தில் தற்காப்பு நடவடிக்கைகளில்தான் பெரும் பாலும் ஈடுபட்டது. இதனால் எதிரிகளின் பலம் குறைவு படவும், செஞ்சேனை வலுவடையவும் வசதியாயிற்று. செஞ்சேனையின் பலம் இருபது லட்சமாயிற்று.

இரண்டாவது வருட ஆரம்பத்திலிருந்து செஞ்சேனை யின் வெற்றி முழக்கம் ஆரம்பமாகியது. தற்காப்பிலிருந்து எதிர்த்தாக்குதல்களில் ஈடுபட முற்பட்டனர். கோமிங்டாங் படையினருக்கு தோல்விக்குமேல் தோல்விதான். எதிரி

களிடமிருந்து ஏராளமான நவீன ஆயுதங்களையும், யுத்த உபகரணங்களையும், தளவாடங்களையும் கைப்பற்றிய வண்ணமாக இருந்தனர். இதனால் நவீன சாதனங்களிலும் செஞ்சேனை நாளுக்குநாள் பலம்பெற்று விளங்க ஆரம்பித்தது. நாளுக்குநாள், யாதத்திற்கு மாதம் செஞ்சேனையின் பலம் பெருகியது. கோ—மிங்—டாங் படை பலஹீன முற்றது. இதில் ஆச்சரியப்பட்ட வேண்டியது என்னவென்றால் எதிரிகளிடமிருந்தே சாதனங்களைப் பெற்று பலம் பெற்றதுதான். சியாங்—கே—சேக் படையினர் செஞ்சேனைக்கு பலம்பெறச் செய்யும் சாதனமாகவே பயன்பட்டனர்.

இம்மாதிரியான சூழ்நிலையை சிருஷ்டித்ததில் பொதுவுடமை வாதிகள் அபாரமான வெற்றி கண்டனர். சரணடைந்த அல்லது கைதுசெய்யப்பட்ட கோ—மிங்—டாங் படைவீரர்களை விசுவாசமுள்ள செஞ்சேனை வீரராக மாற்றுவதில் அற்புதமாக வெற்றி பெற்றனர். மக்கள், செஞ்சேனையின் பின்பலமாக நிற்கும் பொழுது சியாங்—கே—சேக்கின் எந்த சக்தியும் செஞ்சேனையை அசைக்கமுடியவில்லை. ஒவ்வொரு இடமாக செஞ்சேனையிடம் ஒப்படைத்துவிட்டு, பின் வாங்கி ஓட ஆரம்பித்தது கோ—மிங்—டாங் படை.

செஞ்சேனை இந்தப் போராட்டத்திலிருந்து,மக்கள் விடுதலை ராணுவம் என்று அழைக்கப்படுகிறது. நான்கு ஆண்டுகள் போராடி சியாங்— கே— சேக்கின் முதுகெலும்பை முறித்தது. 1949ல் முடிவான வெற்றி கண்டது. இதன் எதிரொலி ஏகாதிபத்தியங்களுக்கு பேரிடியாக விளங்கியது. முற்போக்கு சக்திகளின் வெற்றிச் சின்னமாக பிரதிபலித்தது. ஏகாதிபத்தியங்களின் பிடிப்பிலிருந்து சீன மக்கள் பரிபூரண விடுதலை பெற்றனர். மக்கள் ஜனநாயகம் மலர்ந்தது—புதிய சீனு உதயமாயிற்று.

★

# வெற்றியின் ரகசியம்

★

சீனச்செஞ்சேனை இன்று வல்லரசுகளுக்கும்சிம்ம சொப்பன மாகிவிட்டது.சீனத்தின் சுதந்திரத்தையும்அந்தஸ்தையும உலகில் எந்த ஒரு சக்தியாலும் அசைக்க முடியாதளவிற்கு ஒரு திடமான நிலையை நிலைநாட்டி விட்டது. புதிய சீனவை தோற்றுவித்துவிட்டது. செஞ்சேனையின் சாதனைகள் தான் புதிய சகாப்தத்தின் முகவுரை. இந்த மகத்தான வெற்றிகள் உலக முழுவதையும் பிரமிக்கச் செய்தது. ஜனநாயக முகாமில் புதியபலத்தை ஊட்டியது. ஏகாதிபத்திய முகாமை கிடு கிடுக்கச் செய்தது. இந்த வெற்றிகளுக்கெல்லாம் என்னதான் காரணம்?

மார்க்சிச—லெனினச கண்ணோட்டமும்,பொதுவுடமை வாதிகளின் தலைமையுமே செஞ்சேனை வெற்றிகளுக்கு அச்சும் ஆணியும். மக்களுக்காக நிறுவப்பட்ட மக்கள் ராணுவம், மக்களுடன் கொண்டுள்ள நெருங்கிய தொடர்பே செஞ்சேனை வெற்றிகளுக்கெல்லாம் மூலம். அவர்கள் பெற்றிருந்த ஒப்பற்ற இயல்புகளே மகத்தான சாதனைகளை யெல்லாம் சாத்தியமாக்கியது. ஏனைய ஏகாதிபத்திய ராணுவங்களுக்கு செஞ்சேனை முற்றிலும் மாறுபட்டது. மக்கள் இயக்கங்களை அடக்கி ஒடுக்குவதற்காக கூட்டுவிக்கப்பட்ட கூலிபட்டாளமல்ல, பாட்டாளி மக்களின் தலைமையில் மக்கள் விடுதலைக்குப் பயன்படும் கருவியாகப் பயன் பட்டது, பயன்படுகிறது. மக்களின் சார்பில் மக்களுக்காகத் தொண்டு புரிவதே செஞ்சேனையின் குறிக்கோள்.

உயர்ந்த லட்சித்தையும் உன்னத நோக்கங்களையும் கொண்ட தொண்டர் கூட்டம்; தேசியத்தையும் சர்வ தேசியத்தையும் மார்க்சிச—லெனினச கண்ணோட்டத்தில் காணும் தியாகிகள் குழாம்; மா—சே—துங் போதனையை பின்பற்றும் செயல் வீரர்களின் சேர்க்கை அணியே செஞ்சேனை. விவசாயிகள், தொழிலாளர்கள், புரட்சிக் கருத்துடைய அறிஞர்கள், இவர்களது இணைப்பே செஞ்சேனையாக செயலாற்றுகிறது செம்படையில் விவசாயிகளும் தொழிலாளர்களும் நூற்றுக்கு தொன்னூறு பேர்களிருக்கிறார்கள். வர்க்க உணர்ச்சியும் அரசியல் மனோபாவமும் கொண்டவர்கள். முதலாளித்துவ நாடுகளின் ராணுவங்களிருந்து அடிப்படை வித்தியாசத்தைக் கொண்டது செஞ்சேனை. இன்று சீன மக்கள் விடுதலைப்படை என்று அழைக்கப்படுகிறது.

ராணுவ ஜனநாயக அடிப்படையில் அமைந்துள்ள கட்டுப்பாடு செஞ்சேனையின் தனிச் சிறப்பாகும். அதிகாரிகளுக்கும் சிப்பாய்களுக்கும் உள்ள ஒற்றுமையும் ஒத்துழைப்பும் செம்படையில் காணப்படும் சிறந்த அம்சமாகும். ஒரு சிப்பாயை அவதூறாக பேசவோ அல்லது அடிக்கவோ அல்லது அவமரியாதையாக நடத்தவோ எந்த ஒரு உயர்தர அதிகாரிக்கும் அதிகாரம் கிடையாது. அவரவர்கள் இடத்தில் அவரவர்கள் அவசியமானவர்களாகக் கருதப்படுகிறார்கள் இதனால் சமத்துவம் தானாகவே ஏற்பட்டு விடுகிறது. அரசியல், ராணுவ இயல், பொருளாதாரம் இம்மூன்று துறைகளிலும் ஜனநாயக முறை அனுஷ்டிக்கப்படுகிறது.

அரசியல் ரீதியில் அதிகாரியும் சிப்பாயும் சரிநிகரான வர்களே. இதை வற்புறுத்துவதே அரசியல் ஜனநாயகம். இந்த உணர்ச்சியை சரியானபடி உருவாக்குவதற்கு தனித் குழுக்கள் செயலாற்றுகின்றன. ஒவ்வொரு சிப்பாய்க்கும் தங்கள் அபிப்பிராயங்களையும் குறைகளையும் கூற உரிமை உண்டு. உயர்தர அதிகாரிகளைக் கூட குறை கூறலாம்; குற்றம் சாட்டலாம். ஆனால் அம்மாதிரியான குணதோஷ விமர்சனங்களை குறிப்பிட்ட கூட்டங்களில் தான் கூற முடியும். இந்த முயற்சி ராணுவ வீரர்களிடம் ஊக்கத்தையும் உற்சாகத்தையும் பெருக்க பெரிதும் உதவுகிறது. வர்க்க உணர்ச்சியை உண்டாக்க உயர்ந்த லட்சியத்திற்காக யுத்தம் செய்யும் உறுதியை வண்மை பெறச் செய்கிறது.

சீனச் செஞ்சேனையில் கொடுக்கப்படும் ராணுவப் பயிற்சிகூட ஜனநாயக உணர்ச்சிக்கே ஊக்கமளிக்கிறது. அதிகாரிகளுக்கும் சிப்பாய்களுக்கும் உள்ள தொடர்பு அவ்வளவு நெருங்கியது. அதிகாரிகள் சிப்பாய்களுக்கு போதிப்பதோடு சிப்பாய்களும் அதிகாரிகளுக்கு போதிப்பதுண்டு. அறிஞர்கள், விவசாயிகள், தொழிலாளர்கள் இவர்கள் ஒருவருக்கொருவர் உதவிக்கொள்கிறார்கள். ஒருவருக்கொருவர் ஒத்துழைத்து விஷயங்களைப் பரிமாறிக்கொள்கிறார்கள். பலனை எல்லோரும் பகிர்ந்து அனுபவிக்கிறார்கள். இதுவே மக்கள் படை ராணுவப் பயிற்சியின் சத்தும் சாரமு ፡.

பொருளாதார விஷயங்களும் ஜனநாயகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதுவே பொருளாதார ஜனநாயகம் என்று கூறப்படுவது. உணவு, உறை

விடம் மற்றுமுள்ள வசதிகளை கவனித்து நிர்வகிக்கும் பொறுப்புகளை சிப்பாய்களே மேற்கொள்கிறார்கள். குறிப்பிட்ட காலத்தில் கணக்குகள் பொதுப் பார்வைக்கு வைக்கப்படுகிறது. ஒவ்வொரு கம்பெனிக்கும் பொருளாதார குழுக்கள் உண்டு. ஒவ்வொரு பிளாட்டூனிலிருந்தும் ஸ்காவாடிலிருந்தும் பொருளாதார குழுவுக்கு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

திறமை, ஆக்க சக்தி, அறிவுத் திறன் இவைகளை நடைமுறையில் வீரர்களிடம் அபிவிருத்தி அடையச் செய்வதே ராணுவ ஜனநாயகத்தின் முக்கியநோக்கம். யுத்தத்தின் முடிவு ஆயுதங்களைப் பொறுத்தது; எதிரியின் தன்மையை பொறுத்தது; இடத்தையும் காலத்தையும் பொறுத்தது. இதை மறந்து புத்தக அனுபவத்தை மட்டும் கொண்டு வெறும் வீரச்செயல் வாதங்களுக்கு செஞ்சேனை என்றுமே ஆளானதில்லை.

**"செஞ்சேனையின் ஒவ்வொரு தளபதியும் தங்கள் தங்கள் துருப்புக்களின் தன்மையை (யுத்த வீரர்கள், ஆயுத உபகரணங்கள், சப்ளைகள் பிரசாதனங்கள்) நன்றாக அறிந்திருக்கவேண்டும். இதே போன்று எதிரியின் படை வலிமையையும் தெரிந்திருக்க வேண்டும். இதோடு யுத்த சம்பந்தப்பட்ட சகலவற்றிலும் தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்" (அரசியல், பொருளாதாரம், பூகோள அறிவு, காலநிலை இயல் போன்றவைகள்)** என்று மா-சே-துங் பல முறைகளில் வற்புறுத்தியதை செஞ்சேனை பின்பற்றிவருகிறது. பிர

தட்சய யுத்தங்களின் மூலமாகவே யுத்த இயல்களை தெரிந்து கொள்ளவேண்டும். இதன் அனுபவங்களை விஞ்ஞான ரீதியில் பயன்படுத்தி புத்தியும் தைரியமும் நிறைந்த வீரர்களாக விளங்கவேண்டும். இதைவிடுத்து வெறும் வீரச்செயல் வாதத்தை மேற்கொள்வது முட்டாள்தனமான செய்கை என்பது 'மா'வின் கோட்பாடு. இந்த அடிச்சுவட்டைப் பின்பற்றி வளர்கிறது செஞ்சேனை.

ஒரு நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு முன் பல கூட்டங்கள் ராணுவத்தினருக்காக கூட்டப்படுகின்றன. அந்தக் கூட்டங்களில் வீரர்கள் எதிர்நோக்கவிருக்கும் யுத்தப் பிரச்னைகள் விவாதிக்கப்படுகின்றன. அனுபவ ரீதியில் எத்தகைய முறையை அனுஷ்டித்தால் வெற்றி காண முடியுமென்று அலசி ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருகின்றனர். இதே போன்று யுத்தம் முடிந்த பின்னரும் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. அதில் வீரர்கள் பெற்ற அனுபவங்கள், எதிரிகளிடம் காணப்பட்ட சிறந்த அம்சங்கள், தங்கள் குறைபாடுகள், இவைகளைப் பூரணமாக விவாதித்து தெளிவான முடிவுக்கு வருகின்றனர். இந்த ஏற்பாடு ஒவ்வொரு வீரனும் கண்கூடான நிலைமையை புரிந்துகொள்ள உதவுகிறது. இடம், பொருள் ஏவல் அறிந்து நடவடிக்கையிலிறங்க வசதியிருக்கிறது. வீரச்செயல் வாதத்திற்கு பலியாகாமல் திறமையுடன் போரிட்டு பலன் பெற பெரிதும் பயன்படுகிறது.

மக்கள் படையிலுள்ள ஒவ்வொருவரும் எவரிடமிருந்தும், எப்பொழுதும், அறிந்துகொள்ளத் தகுதியுள்ள விஷ

யங்களை தெரிந்துகொள்ள தயங்குவதே கிடையாது. யுத்தம் முடிந்தவுடன் தாங்கள் வெற்றிபெற்ற யுத்த கைதிகளை வரவழைத்து அவர்கள் கையாண்ட யுத்த முறைகளையும் புதிய ஆயுதங்களையும் பற்றி அவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது மக்கள் படையினரின் சாதாரணப் பழக்கம்.

**ஏகோபித்த எண்ணத்தின்மீது மனப்பூர்வமான கட்டுப்பாடு மக்கள் படையில் உருவாக்கப்படுகிறது.** விடுதலைப்படையினர் வீரர்களாக விளங்குவதோடு அறிஞர்களாகவும் விளங்க போதிய முயற்சி எடுத்துக்கொள்ளப் படுகிறது. கல்வி அறிவு, மக்கள் படையில் மிகத் தீவிரமாக பரப்பப்பட்டு வருகிறது. அரசியல் அறிவு வளர்ச்சிக்கு அதிக கவனம் செலுத்தப்படுகிறது. பொதுவுடமைக் கட்சியின் கொள்கைகளையும் திட்டங்களையும் உணர்ந்து கொள்ளும் முறையில் கல்விப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மக்களோடு மக்களாக ஒன்றுபட்டு விளங்க புரட்சிகரமான மனப்பான்மை உருவாக்கப்படுகிறது. தான் எதற்காக ஏன் யுத்தம் செய்யவேண்டும் என்பதை அரசியல் ரீதியில் அறிந்தால்தான் அந்த வீரனிடம் தீவிரமான திடமுள்ள செயலை எதிர்பார்க்க முடியும்.

எதற்காக? ஏன்? யாருக்காக? யுத்தம் செய்கிறோம் என்ற கவலையில்லாமல் யுத்தம் செய்வது மட்டுமே கடமை என்று கருதுவது முதலாளித்துவ முறை. ஆனால் மக்கள் படையினரோ இதற்கு முற்றிலும் மாறுபட்டவர்கள். ஒவ்வொரு வீரனும், எதற்காக? ஏன்? யாருக்காக? யுத்தம் செய்கிறோம் என்பதை நன்கு அறிவான். சீனத்திடமும்

அதன் மக்களிடமும் ஒவ்வொரு வீரனும் பரிபூரண விசுவாசம்கொண்டவன். தாம் ஒரு உயர்ந்த லட்சியத்தின் பொருட்டு போரிடுவதை ஒவ்வொரு வீரனும் உணரும்படி உருவாக்கப்படுகிறான். அந்தளவிற்கு அரசியல் பயிற்சி அளிக்கப்படுகிறது. அரசியல் பயிற்சியின் முக்கிய நோக்கம் சிப்பாய்களிடமும் அதிகாரிகளிடமும் அரசியல் விழிப்பையும் வர்க்க உணர்ச்சியையும் உண்டாக்குவதேயாகும்.

ராணுவ நிலைமைகளைப்பற்றி படையினருக்கு அவ்வப்போது பிரசங்கங்கள் நடத்தப்படுகின்றன. எதிரிகளின் பலத்தையும் தங்களது சக்தியையும் ஆராய்ந்து எப்படி வெற்றிபெற முடியுமென்று விளக்கப்படுகின்றன. வெற்றி தங்களுக்குத்தான் என்ற உறுதியை ஒவ்வொரு வீரனும் யுத்தகளத்தில் பிரவேசிக்கும் முன்பே பெற்றுவிடுகிறான். மேலும் தற்காலப் பிரச்சனைகளைப் பற்றிய பிரசங்கங்களும் நடைபெறுவதுண்டு. நிலச் சீர்திருத்தம், வர்த்தகம், கைத்தொழில் இத்துறைகளில் அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கைகளைப்பற்றியும் விரிந்தளவில் விளம்பரப்படுத்தப் படுகிறது. **மொத்தத்தில் மக்கள் படை உயர்ந்த அரசியல் அறிவுகொண்ட வீரர் கூட்டம்.**

போர்வீரர்களாக மட்டுமல்ல சிறந்த கலைஞர்களாகவும் விளங்கி வருகிறார்கள். பேனா முனையையும் சிறந்த ஆயுதமாக உபயோகிக்கும் ஆற்றலைக் கொண்டவர்கள். மக்கள் படையினர் முதல்தரமான வீரர்கள் மட்டுமல்ல முழுப்பண்பாட்டையும் பெற்றவர்கள். கலைத்துறைக் கல்விக்கு மக்கள் படையில் முக்கிய இடமுண்டு. இதில் அதிகாரிகளும்

சிப்பாய்களும் ஆர்வத்துடன் பங்கெடுத்துக்கொள்கின்றனர். இதற்கான செலவுகளை தங்கள் சம்பளப் படிகளிலிருந்தே செலவு செய்கின்றனர் தங்கும் விடுதிகளில் மட்டுமல்ல யுத்த அரங்கங்களிலும்கூட கலா நிகழ்ச்சிகள் உண்டு. பத்திரிகைகள், சங்கீதங்கள், விளையாட்டுகள், போட்டிப்பந்தயங்கள் சித்திரங்கள், விவாதங்கள் நடைபெறுவதுண்டு. படை முன்னேற்ற காலங்களிலகூட, சிறு சிறு வெளியீடுகள் வெளியாவதுண்டு. கவிகள் புனைதல், கற்பனைச் சித்திரங்கள் தீட்டுதல் இவைகளை போர்வீரர்களே செய்வார்கள். இதன் மூலம் தங்கள் அனுபவத்தையும் அபிப்பிராயங்களையும் வெளியிடுவார்கள். இத்துடன் விசித்திரமான ரேடியோ நிகழ்ச்சிகள், வேடிக்கையான டெலிபோன் செய்திகளும் உண்டு என்றால் ஆச்சரியமாகத்தானிருக்கும். ஆனால் உண்மை. படையினரின் கலா நிகழ்ச்சிகள் அவர்கள் வாழ்க்கையின் பிரத்தட்சய அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கும். இதன் மூலம் அனுமானத்தை அனுபவமாக மாற்றுவதில் அற்புதமாக வெற்றி பெறுகிறார்கள். கலைதுறைக் கல்வியுடன் நுண்கலை அறிவு பெறவும் பயிற்சியளிக்கப்படுகின்றனர். **விடுதலைப் படையினரின் முகாம்கள் கல்லூரியாகவே விளங்கி வருகின்றன.**

மக்கள் விடுதலைப் படையினரின் மாபெரும் வெற்றிக்கு முழு முதல் காரணம் பொதுமக்களின் பேராதரவுதான். மக்களின் நன்மைக்காக மக்களுடன் மக்களாக ஒன்றுபட்டு போராடினார்கள். மக்களின் நலத்தை மனப்பூர்வமாக விரும்பி விசுவாசத்துடன் பிரதிபலித்தார்கள். மக்களுக்கும்

ராணுவத்தினருக்கும் உள்ள தொடர்பை மேலும் மேலும் வளர்ப்பதற்கான வழிமுறைகள் கையாளப்பட்டு வருகின்றன. தண்ணீரும் மீனும் தான் மக்களும் ராணுவமும் இந்த கொள்கைகளுக்கேற்றாற்போலவே மக்கள் படையினருக்கு சட்டதிட்டங்களும் விதி முறைகளும் வகுக்கப்பட்டிருக்கின்றன.

செஞ்சேனை கடைப்பிடிக்க வேண்டிய மூன்று கொள்கைகள் கவனிக்க வேண்டிய எட்டுக்குறிப்புகள் வகுக்கப்பட்டிருக்கின்றன.

**கொள்கைகள் :—**

(1) எந்த சூழ்நிலையிலும் உத்தரவுகளுக்கு கீழ்படிதல்.

(2) காதற்ற ஊசியையும் மக்களிடமிருந்து எடுக்கலாகாது.

(3) பொதுவாகப் பெற்ற லாபம் அனைத்தையும் அரசாங்கத்திடம் ஒப்படைத்தல்.

**குறிப்புகள் :—**

(1) மக்களிடம் மரியாதையாகப் பேசு.

(2) சகலவிதமான நடவடிக்கைகளிலும் நாணயத்தைக் கடைப்பிடி.

(3) எல்லா இரவல் சாமான்களையும் திரும்பக்கொடு.

(4) சேதப்படுத்திய பொருளுக்குரிய தொகையை கொடு.

(5) மக்களைத் திட்டாதே; அடிக்காதே.

(6) பயிர்களைப் பாழ்படுத்தாதே.

(7) பெண்களைச் சுற்றித்திரிந்து முட்டாளாகாதே.

(8) யுத்த கைதிகளை மரியாதையாக நடத்து.

ஒவ்வொரு சிப்பாயும் மேலே கூறிய கொள்கைகளையும் குறிப்புகளையும் கவனத்தில் வைத்திருப்பதுடன் நடைமுறையில் கண்டிப்பாக கட்டுப்பாட்டுடன் கடைப் பிடித்தாக வேண்டும்.

செம்படையினர் மக்கள் நலனுக்கும் மேம்பாட்டிற்கும் பாடுபடும் புரட்சிகரமான ராணுவம். அரசாங்கம் மக்களுடையது என்பதை ராணுவத்தினர் உணர்வதுடன் அது தங்களுடையதும் என்று கருதுகின்றனர். அரசாங்கப் பொருளாதார முன்னேற்றத்திற்கும் உதவுகின்றனர். சந்தர்ப்பம் கிடைத்த போதெல்லாம் உற்பத்திபெருக்கில் ஈடுபடுகின்றனர். சில சமயங்களில் தங்களுக்குத் தேவையான பொருள்களை தாங்களே செய்துகொள்கின்றனர். உதவிபுரிவதற்கும் மக்களுக்குச் சேவை செய்வதற்கும் எப்பொழுதும் தயாராக இருப்பது மட்டுமல்ல முழுமனதுடனிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

சமாதான காலங்களில் ஸ்தல ஆட்சியாளர்களுடன் ஒத்துழைத்து ஏழைமக்களுக்கு உதவி புரிகின்றனர். விவசாயத்தில் ஈடுபடுவதிலும் பின்வாங்குவதில்லை. அறுவடைகளிலும், உழவுகளிலும், பங்கெடுத்துக் கொள்கிறார்கள். இந்த உழைப்புகளுக்கு எவ்விதமான ஊதியங்களையும் ஏற்றுக்கொள்வது கிடையாது. இதற்கு மாறாக தாங்கள் பெற்றுள்ள சௌகரியங்களையும் உடமைகளையும் தியாகம் செய்கிறார்கள். இதோடு நிற்காமல் மக்கள் கல்விக்காகவும் பாடுபட்டு வருகிறார்கள். பள்ளிகள், வாசக சாலைகள், நூல் நிலையங்கள் இவைகளை நிறுவி திறம்பட நடத்தி வருகின்றனர். பாதுகாப்புக்காக மட்டுமல்ல இன்றைய சீனாவின் சிருஷ்டி கர்த்தாக்களாக விளங்கி வருகின்றனர் செம்படையினர்.

★

# தியாகிகளின் தீரச் செயல்கள்

☆

**பொ**து மக்களின் உடமைகளை சூரையாடுதல்; கொள்ளையடித்தல்; பெண்களிடம் தகாத முறையில் நடத்தல்; இதுபோன்றவைகள் முதலாளித்துவ ராணுவங்களில் காணப்படும் சர்வசாதாரண நிகழ்ச்சிகள். சென்ற முப்பதாண்டு வரலாற்றில் எந்த ஒரு செம்படையினரும் பொது மக்களிடம் தகாதமுறையில் நடந்துகொண்டதாகத் தெரியவில்லை. பொதுமக்களை தங்களிலிருந்து வேறுபட்டவர்களாக கருதினுல்தானே இந்தவிதமான அசம்பாவிதங்கள் எல்லாம் ஏற்பட இடமுண்டு.

செம்படையினர் போர்களத்தில் புரிந்துள்ள தியாகங்களையும் வீரச் செயல்களையும் நினைத்துப் பார்த்தாலே மயிர்க் கூச்செரியும். அவைகள் அனைத்தையும் இங்கு கூற இயலாது. ஒன்றிரண்டு சம்பவங்களை மட்டும் கவனிப்போம். இதுவே செம்படையினரின் வீரத்தையும் தியாகத்தையும் தெரிந்துகொள்ள போதுமானது.

செம்படையினரின் நெடுந்தூரப் பிரயாணமே ஒரு தியாக வரலாறுதான். அந்தப் பிரயாணத்தில் செம்படையினர் **குவைசௌ (Kwei chow)** மாகாணத்திலுள்ள **வூ** நதியை அடைந்தார்கள். அது ஜனவரி மாதம் கொடுங்குளிர். பனி உரைந்த நதியின் தண்ணீர் படையின் முன்னேற்றத்தை தடைபடுத்தியது.

செம்படை நதியைக் கடந்துவிடாமல் கோ-மிங்-டாங் ராணுவத்தினர் பக்கவாட்டிலிருந்து வெகுமும்மரமாகத்

தாக்க முனைந்தார்கள். எல்லாப் பாலங்களையும் தகர்த்தெரிந்தனர். படகுகள் அனைத்தும் அழிக்கப்பட்டு நாசமாயின. எதிர் கரையில் இருந்துகொண்டு செம்படைமீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தவண்ணமாக இருந்தார்கள். நதியைக் கடப்பதே காரிய சாத்திய மற்றதாக இருக்கும்பொழுது எதிரிகளின் பயங்கரமான தாக்குதல் வேறு.

அபாயகரமான இந்த சூழ்நிலையில் நதியைக் கடக்கும் திட்டத்தை நிறைவேற்றவேண்டிய பொறுப்பு பதினெட்டு இளம் வீரர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த வீரர்கள் தங்களிடம் ஒப்புவிக்கப்பட்ட பொறுப்பை நிறைவேற்ற தங்கள் உயிரையே பணயமாகவைக்க முன்வந்தனர்.

நடுநிசி; பேயும் பயப்படும் பயங்கர இருள்; ஒரு சிறு கூட்டம் பனி உரைந்த அந்த நதியைக் கடந்து கொண்டிருந்தது. அந்த இருட்டில் அதை யாராலும் கவனிக்க முடியாது. வீரர்கள் போர்த்தி இருந்த தோல்கள் இதற்கு பெரிதும் உதவியது. தோள்களில் துப்பாக்கிகளும் எரிகுண்டுகள் நிறைந்த பைகளும் தொங்கிக்கொண்டிருந்தன. கொஞ்சமும் சந்தடியின்றி நதியின் மறுகரையை எட்டிப்பிடித்தது அந்தக் கூட்டம். எதிரிகளின் காவல் இருந்த போதிலும் எடுத்த இடுப்பில் எரிகுண்டுகளை வீச ஆரம்பித்தார்கள். துப்பாக்கி விசைகளை தொடர்ந்து முடுக்கி விட்டார்கள். கனவிலும் கருதாத எதிர்பாராத இந்த நிகழ்ச்சி எதிரிகளை அப்படியே பிரமிக்கச் செய்தது. அதிர்ச்சியுற்று திகைத்துப் போயினர். இவர்கள் சுய உணர்வுபெற்று சுதாரிப்பதற்கு முன் செம்படை வீரர்கள் பம்பரமாகச் சுற்றி குண்டுமாரி பொழிந்தனர். எதிரிகளுக்கு

என்னதான் நிகழ்கிறது என்பதைச் சரிவரத் தெரிந்துகொள் வதற்குகூட அவகாசமில்லை. செம்படை முழுவதுமே கரை யேறிவிட்டதாக நினைத்து நிலைகுலைந்து கலகலத்தனர். இந்த இடை வேளையில் செம்படை முழுவதும் எவ்விதமான எதிர்ப்புமின்றி நதியைக் கடந்தது. அவ்வளவுதான். கோமிங் டாங் ராணுவம் தலைதெரிக்க பின்வாங்கி ஓடியது.

1948-ம் வருடம் நவம்பர் மாதம் கோ—மிங்—டாங் ராணுவத்தினரைப் பின்தொடர்ந்து தாக்கும்படி செம்படை யினரின் ஒரு பிரிவிக்கு உத்திரவிடப்பட்டது. இவர்கள் எதிரியை பின்தொடர்ந்து விரட்டிவரும்பொழுது முப்பதடி அகலமுள்ள ஒரு ஓடை குறுக்கிட்டது. ஓடையின் எதிர் கரையிலிருந்து பகைவர்களின் குண்டுகள் பாய்ந்துவந்த வண்ணமாக இருந்தது. ஓடையைக் கடக்க ஒரு பாலம் கட்ட உத்திரவிடப்பட்டது. மிகுந்த கஷ்டத்துடன் பாலத் தின் மேற்பரப்பு கட்டி முடிக்கப்பட்டது. ஆனால் அதைத் தாங்கி நிற்க கருடார்களோ அல்லது கட்டைகளோ கிடைக்க வில்லை. கொஞ்சமும் தயங்காமல் பத்து வீரர் முன்வந்தார் கள். அந்தப் பனி உறைந்த ஓடையில் இறங்கி, இருவரி சையில் நின்றார்கள்; தூண்களாக மாறினார்கள். இவர்கள் மீது மேற்பரப்பு விரிக்கப்பட்டது. மனிதப் பாலமும் தயா ராயிற்று. படையினர் ஓடையைக் கடக்க ஆரம்பித்தார்கள். தண்ணீரில் இறங்கி நின்ற வீரர்கள் குளிரினால் விறைத் தார்கள்; உணர்வை வெகுவேகமாக இழந்து வந்தார்கள். பாலமும் படிப்படியாக தண்ணீருக்குள் அமிழ்ந்துகொண்டு வந்தது. ஆனால் செம்படையின் கடைசி வீரன் ஓடையைத் தாண்டும் வரை பாலம் அமிழ்ந்து விடாமல் உயிரைக்

கையில் பிடித்துக்கொண்டு காத்து நின்றார்கள். அந்தப் பத்து வீரர்கள். இதுபோன்று ஆயிரக்கணக்கான தியாக நிகழ்ச்சிகளை கூறிக்கொண்டே போகலாம்.

செம்படையின் ஒவ்வொரு வீரனும் ஒரு தியாகியாகவே விளங்கி வந்திருக்கிறான். தங்கள் வாழ்க்கை நலனை நாட்டின் நல்வாழ்விற்காக பலியிடும் பண்பை பரிபூரணமாகப் பெற்றிருந்தார்கள். ஜப்பானியர்களோடு எதிர்த்துப் போராடும் பொழுது அவர்களுடன் இருந்த பல பத்திரிகை நிருபர்கள் செம்படையினரின் தியாக வாழ்க்கையைக் கண்டு ஆச்சரியத்துடன் திகைத்துப்போனார்கள். பல புத்தகங்கள் மூலம் வெகுவாகப் புகழ்ந்திருகிக்கின்றனர். அதில் ஒரு சில பகுதிகளை கீழே தருகிறோம்.

செம்படை குறைவான வசதிகளுடையது. போதுமான உணவு, உடை இல்லை. தலைத்தொப்பியும் கால்மிதியடியும் வைக்கோலினால் தயாரிக்கப் பெற்றவை. குளிருக்கு கம்பளிகூட கிடையாது."

"அன்று செம்படையிருக்குப் போதுமான ஆகாரம் இல்லை. பட்டினியாகவே கிடந்தனர். ஆனால் இந்தப் பட்டினிப் போர்வீரர்கள் முகாமின் ஒரு பாகத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் உற்சாகமாக கலந்து கொண்டு பாடத் தொடங்கினார்கள். செம்படை வீரர்கள் எங்கெல்லாம் இருக்கிறார்களோ அங்கெல்லாம் இந்தப் பாடல்களை கேட்கலாம். ராணுவத்தினர் அனுசரிக்கவேண்டிய மூன்று கொள்கைகளையும் கவனிக்கவேண்டிய எட்டுக் குறிப்புகளையும் கொண்டதே இப்பாட்டு. குளிரினால் விரைத்துப்போன போதிலும்

இவர்கள் யுத்தம் செய்வார்கள். பனி உரைந்த போர்களத்தில் படுத்துக்கொண்டு விடுவார்கள்."

"செம்படை ஒவ்வொரு துறையிலும் புதுமை பெற்றே விளங்கியது. அவர்கள் கையில் கிடைத்த ஆயுதங்களைக் கொண்டு போராடினார்கள். ராணுவத்திற்கு வேண்டிய சாதனங்களோ சௌகரியமோ மொத்தத்திற்குமே இல்லை யென்று கூறி விடலாம். ஒவ்வொருவீரனும் மாதத்தற்கு மூன்று சீன டாலர்தான் சம்பளமாகப் பெறுகிறான். ஒரு டாலர் மூன்று அணவுக்கு சற்று அதிகமானது. மக்கள் கொடுக்கும் உணவையே பெரும் பாலும் உண்டு வந்தார்களென்றால் அது நமக்கு ஆச்சரியமாகத்தானிருக்கும். ஆனால் அவர்களிடம் காணப்பட்ட உணர்ச்சியோ கட்டுக் கடங்காமல் இருந்தது."

"செம்படை அதிகாரிகள் 5 டாலர்தான் மாதச் சம்பளமாகப் பெற்றனர். இவர்களைப் போன்ற அதிகாரிகளுக்கு ஏனைய ராணுவங்களில் 1000 டாலர் சம்பளம் கொடுக்கப் படுகிறது. யுத்தங்களில் காயமுற்ற போர்வீரர்களை விவசாயிகள் தாங்களாகவே வந்து தூக்கிச் சென்று இடம்கொடுத்து காப்பாற்றுகிறார்கள். அவர்களது முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறார்கள். எல்லாம் புதுமையாகவே நமக்குத் தோன்றும்."

"எங்கள் வழி முழுவதிலும் பரிதாபகரமான காட்சியே கண்டோம். காயமுற்றவர்கள் கவனிப்பாசற்றுக் கிடந்தனர். மாதக்கணக்காய் அழுக்குப்பிடித்த அதே படுக்கையில் கிடந்தார்கள். மானத்தை மறைத்துக் கொள்ளும் அள

வுக்கு கூட ஆடைகள் இல்லை. போதிய ஆகாரமின்றி மெது வாக இறந்துகொண்டே வந்தார்கள். மற்றொருநாள் பரிதாபத திற்குறிய ஒரு செம்படை வீரனைச் சந்தித்தோம். முகத்தில் சரிபாதி துப்பாக்கியால் பிய்க்கப்பட்டிருந்தது. பாதிநாக்கும் போய்விட்டது. அவனால் ஒன்றையும் விழுங்கமுடியவில்லை. மெதுவாக மாண்டு கொண்டிருந்தான். ஒரு முட்டையோ அல்லது வேறு எதுவுமே இங்கு கிடைக்க வில்லை. முப்பது மைல் தாண்டிச் சென்றால் தான் வாங்க முடியும். கைவசம் கொண்டு சென்ற அத்தியாவசியமான மருந்துகளும், பிற வும் தீர்ந்து விட்டன. தேவையான சாதனங்களுமில்லை. இருந்தபோதிலும் இருப்பதைக் கொண்டு பெரிய பெரிய ரண சிகிட்சைகளை மேற்கொண்டேன் இவர்களுக்கு வைத் திய உதவி உடனடியாகத் தேவை"

ஜப்பானிய எதிர்ப்பு போராட்ட காலத்தில் எட்டாவது ராணுவத்துடன் சென்றிருந்த கனடா மிஷன் டாக்டர் **ப்ரவன் (Bruwn)** மேலே கூறும் கதைகளை முழுவதும் கேட்டால் உண்மையில் நம்பவே முடியாது. அவ்வளவு அசாதாரண நிகழ்ச்சிகளாகத் தோன்கிறது.

ஆண்களுடன் பெண்களும் போட்டிபோட்டுக் கொண்டு செம்படையில் பங்கு கொண்டனர். பல சந்தர்ப்பங்களில் செம்படையைச் சேர்ந்த பெண்கள் தங்கள் அபாரமான ஆற் றலை உலகிற்கு பறை சாற்றியுள்ளார்கள். மா—சே— துங்கின் மனைவியார் **ஹோத்—சே—சுன்** செம்படையின் ஒரு பகு திக்கு தலைவியாக விளங்கியிருக்கிறார். பல போராட்டங்களில் பங்கு பெற்றிருக்கிறார். தலை சிறந்த நர்ஸாகவும் தொண் டாற்றி யுள்ளார். காயமடைந்த எத்தனையோ வீரர்களை

தமது தோளின்மீதே சுமந்து தூக்கிச் சென்றிக்கிறார். நெடுந்தூரப் பிரயாணத்தில் இவர் தேகத்தில் இருபது இடங்களில் குண்டுக்காயங்கள் பட்டன. இவைகளை ஒன்றையும் பொருட்படுத்தாமல், தாம் ஒரு கர்ப்பிணியென்பதையும் கருதாமல் ஒரு தலை சிறந்த வீராங்கனையாக விளங்கினர்.

செம்படையைச் சேர்ந்த பெண்களில் **டாங்—யிங்—சாவோ** குறிப்பிடத்தகுந்தவர். இவர் இன்று சீனத்தின் பிரதமராக விளங்கிவரும் **செள—என்—லாயின்** மனைவியார். பள்ளியில் படித்துக்கொண்டிருக்கும் பொழுதே 1919ம் வருடத்திலிந்து சீனப் புரட்சியில் தீவிரமான பங்கு கொண்டார். மாணவஸ்தாபனங்களை புரட்சிசரமான சாதனங்களாக மாற்றுவதில் அபாரமான வெற்றி கண்டவர். 1927ம் வருடத்திலிருந்து **ஷாங்கே** நகரத்தில் தலைமறைவாக இருந்துகொண்டே புரட்சிக்கு ஆக்கமளித்து வந்தார். நெடுந்தூரப் பிரயாணத்திலும் கலந்து கொண்டார். அப்பொழுது க்ஷய ரோகத்தால் பீடிக்கப்பட்டிருந்ததையும் பொருட்படுத்தாமல், உற்சாகத்துடன் பங்கு கொண்டார். இந்த அம்மையின் அனுபவத்தை அவர் வாயிலாகவே கூறுவதைக் கேளுங்கள்.

“படையில் காயம் அடைந்தவர்களுக்கு சிகிட்சை செய்வது தான் எங்களுக்கு மிகவும் கடினம். காயமடைந்தவர்களை படையைச் சேர்ந்த பெண்களே தூக்கிச் செல்லவேண்டியதாயிற்று. இது மிகவும் கடினமாகவே இருந்தது பத்துப் பன்னிரண்டு நாட்களுக்கு மேலாக சேர்ந்தாற் போல் எங்களுக்கு புல்லைத்தவிர வேறு ஆகாரம் கிடையாது. பல நாட்கள் பட்டினியும் கிடந்திருக்கிறோம்’

இவ்வளவு கஷ்டங்களிலும் நீங்கள் எப்படி சந்தோஷமாக இருந்தீர்கள் என்று கேட்கப்பட்டதற்கு, "எங்களுடைய வருங்காலம் பிரகாசமுள்ளது. நாங்கள் போகிறவழி சரியான வழியென்று எங்களுக்கு நிச்சயமாகத் தெரிகிறது. எல்லா இடையூறுகளையும் சமாளித்து விடுவோம் என்ற தைரியமும் நம்பிக்கையும் எங்களுக்கு இருந்தது" என்று பதில் கூறினார். இந்த தீர்க்கதரிசனம் இன்று நிதர்சனமாகி விட்டது.

வாங்-ப்பெங் ய்ங்க், சேய்-மேன்ங்-சி, லீ-சேங், லீ-சியோ சேங் இவர்கள் போன்ற ஆயிரம் ஆயிரம் வீர வனிதைகள் செம்படைப் போராட்டங்களில் பங்கு கொண்ட வீரமிகுந்த தியாக நிகழ்ச்சிகள் அனைத்தையும் இச் சிறு வெளியீட்டில் கூற முடியுமா?

# தலைசிறந்த தளபதிகள்

★

சீனச் செஞ்சேனை என்று கூறும்பொழுதே சூட்டேயின் நினைவு தானுகவே தோன்றும். செஞ்சேனையின் சிருஷ்டி கர்த்தா. ஆரம்ப முதல் இன்று வரை செஞ்சேனையின் வளர்ச்சிக்காக தம் வாழ்க்கை முழுவதையும் அப்படியே அர்ப்பணித்துவிட்ட வீரர் செஞ்சேனையின வளர்ச்சிக்காகவும் வெற்றிகளுக்காகவும் சூட்டே அனுபவித்த அல்லல்களுக்கும், புரிந்த தியாகத்திற்கும் எல்லை கிடையாது. ஏன்? கற்பனைக்கும் அப்பாற்பட்டது பிறவியில் ஒரு பெரும் பணக்காரராக இருந்தும் நாட்டிற்காக அந்த சுக வாழ்வை பலியிட்டார். ஒரு ஏழை அடிமைப் பெண்ணை மணந்து அவரையும் செம்படையில் பங்குபெறச் செய்தார். தியாகத்தின் சின்னமாக விளங்கிவரும் சூட்டே சீன மக்கள் விடுதலைப் படையின் பிரதம தளபதி. **பெங்க்-டே-ஹுயே** (Peng-Teh-Huai) உப பிரதம தளபதியாக விளங்கி வருகிருர். **லியோ-போ-செங்** (Liu-Po-Cheng) **லிங்-பியோ** (Lin-Pias) **சென்-யி** (Chen-Ki) முதலியோர்கள் குறிப்பிடத்தகுந்த தளபதிகள். இவர்களது சலியாத உழைப்பும், ஊக்கமும், உணர்ச்சியும், உற்சாகமும் செஞ்சேனையை உலகத்தின் மாபெரும் சக்தியாக உருவாக்கி வருகிறது.

"புரட்சியை நிறைவேற்றுவதற்காக உணர்ச்சிபூர்வமான உன்னதப் பொறுப்பு வகிப்பதும், மிகத் தீவிரமான உற்சாகம்

கொண்டு விளங்குவதும்தான் புரட்சிகரமான வீரம். புரட்சியினால் ஏற்படும் அத்தனை துன்பங்களையும் அனுபவிக்க முந்திக்கொள்வதும், புரட்சியினால் வரும் இன்பங்களை அனுபவிக்க கடைசி வரிசையில் நிற்பதும்தான் புரட்சிகரமான வீரமாகும். புரட்சியின் நலன்களுக்கும், கோரிக்கைகளுக்கும், தனி நலன்களை தியாகம் செய்வதுமட்டுமல்ல, கொஞ்சமும் தயக்கமின்றி தனது இன்னுயிரை அர்ப்பணிப்பதற்குத் தயாராய் முன்வருவதுதான் புரட்சிகரமான வீரம். மக்களின் லட்சியம்தான் புரட்சி லட்சியம்; மக்களுக்காக அவர்களே ஏற்படுத்திக்கொள்ளும் லட்சியம்தான் புரட்சி தனிப்பட்டவர்களின் சகல நலன்களும் எந்தவித நிபந்தனையுமின்றி மக்களின் நலன்களுக்கு உட்படுத்தப்படவேண்டும்."

புரட்சிகரமான வீரத்திற்கு இவ்விதமாக விளக்கம் தரும் சூட்டே தனித்தன்மை பெற்றவர். இவரைப் போன்றதொரு தளபதியை வேறு எங்கும் காணமுடியாது. அவருக்கு நிகர் அவர்தான். ஒரு அதிசயப் பிறவி. அவரிடம் காணப்படும் அசாதாரணமான ஆற்றல்தான் செஞ்சேனையின் வெற்றிகளுக்கெல்லாம் அடிப்படை. வாழ்க! செஞ்சேனை.



# S. பாலு ரேடியோ சர்வீஸ்

3, தானப்ப முதலி தெரு, மதுரை.

★

எங்களிடம் :—

★

**நேஷனல் எக்கோ ரேடியோவும்**
**எல்லாவிதமான ரேடியோ ஸ்பேர்**
**பார்ட்ஸ்களும் குறைந்த விலையில் கிடைக்கும்.**

N. B. நண்பர்கள் சௌகரியத்தை முன்னிட்டு தவணை முறைகளில் **எக்கோ ரேடியோக்களை** விநியோகிக்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**எங்களது ஷோரூமிற்கு விஜயம் செய்யுங்கள்!**

## பொருப்புள்ள சேவை!

— தினசரி —

சிவகாசி, ஸ்ரீவில்லிப்புத்தூர்,
ராஜபாளையம், சேத்தூர்,
தளவாய்புரம், முகவூர்
முதலான இடங்களுக்கு
எங்கள் லாரிகளை
அனுப்பும்

# S. பாலு லாரி சர்வீஸ்

7 வருட
காலமாக சேவை
செய்து வருகிறோம்

தலைமை ஆபீஸ் :

No. 3, தானப்ப முதலி தெரு
மதுரை.

உரிமையாளர்கள் :

S. சேஷய்யா நாயுடு & சன்.